மரத்தின் மேலே ஒரு
தேன்கூடு இருந்தது,

"தேனீக்கள் எப்படி
கூடு கட்டுகின்றன?
தேனைச் சிந்தாமல்
எப்படிச் சேமிக்கின்றன?
அதையும்
பார்க்கவேண்டுமே"
என்று நினைத்தாள்.

உடனே அவளுக்குச்
சிறகுகள் முளைத்தன.



"ஊ ஊ ய்ய்" மகிழ்ச்சியில் கத்தினாள்.
பறந்து சென்று தேன்கூட்டுக்குள் புகுந்தாள்.



பலவகை தேனீக்களை
ஆர்வமாகப் பார்த்தாள்.

இவ்வளவு சிறிய தேனீ,
இத்தனை வேலைகள்
செய்கிறதா? வியப்பு
தாளவில்லை.

தேன்கூட்டைவிட்டு வரவே
மனமில்லை. தயங்கியபடியே
வெளியே வந்தாள்.



மரக்கிளையில் அமர்ந்தாள்.
கீழே அழகான நீரோடை.
அதில் மீன்கள் நீந்துவதைப்
பார்த்தாள்.

மீன்களைப் போல நீந்த
வேண்டுமென்று ஆசை
வந்தது.

அடுத்து என்ன நடந்திருக்கும்? கதையைத் தொடர்ந்து கூறுக.



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 108 31-03-2019 14:54:17

# பயிற்சி

## படித்துப்பழுகுக

உடல் அதிர்ந்தது | மரத்தடியில்

தடுமாறினாள் | சட்டென்று | கத்திக்கொண்டு

வியந்தவாறு | தேனீக்கள்

## எழுதிப் பழகுக

எறும்புப்புற்று | தேன்கூடு

சிறகுகள் | மரக்கிளை | நீரோடை

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. எறும்புப்புற்று பெரியதாக வளர்ந்தது. ▢
2. கண்மணி எறும்பாக மாறிவிட்டாள். ▢
3. நீரோடையில் வாத்துகள் நீந்துவதைப் பார்த்தாள். ▢
4. நீரில் நீந்த வேண்டும் என்று கண்மணி நினைத்தாள். ▢
5. கண்மணி மரத்தடியில் அமர்ந்தாள். ▢

3XR8N3

## வாய்மொழியாக விடை கூறு

1. கண்மணி எங்கெங்கே சென்றாள்? என்னவெல்லாம் பார்த்தாள்?
2. கண்மணிக்கு என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன?
3. கண்மணியைப் போல உனக்கு எங்கெல்லாம் சென்று பார்க்க ஆசை?


## விடை எழுதுக

1. கண்மணி எங்கெங்கே சென்றாள்?



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 109 31-03-2019 14:54:17

## படங்களைத் தொடர்புப்படுத்திக் கதை உருவாக்குக








## கதையைக் கேட்டு முடிவை மாற்றிக் கூறுக






3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 110
31-03-2019 14:54:19



# 18. விரும்பி வேலை செய்யலாம்

வீட்டில் வேலை செய்யலாம்
விரும்பி நாமும் செய்யலாம்
படுக்கை சுருட்டி வைக்கலாம்
தரையைக் கூட்டிப் பெருக்கலாம்

உண்ணும் தட்டைக் கழுவலாம்
உடுத்தும் உடைகள் மடிக்கலாம்
கடையில் பொருள்கள் வாங்கலாம்
செடிகள் நட்டு வளர்க்கலாம்

இந்த வேலை பெரிதென
ஏற்றத்தாழ்வு இல்லையே!
எந்த வேலை ஆயினும்
எல்லாருமே செய்வோமே!

HJ7LGL

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

# பயிற்சி

## ஒலித்துப்பழகுக

செய்யலாம் பெருக்கலாம்

கழுவலாம் மடிக்கலாம் வாங்கலாம்

வளர்க்கலாம் வைக்கலாம்

## படித்தும் எழுதியும் பழகுக

வீடு வேலை செடிகள்

தரை உடை கடை

தண்ணீர் படுக்கை ஏற்றத்தாழ்வு

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | படுக்கை | – | மடிக்கலாம் |
| 2. | உடுத்தும் உடைகள் | – | நட்டு வளர்க்கலாம் |
| 3. | கடையில் | – | சுருட்டி வைக்கலாம் |
| 4. | உண்ணும் தட்டை | – | பொருள்கள் வாங்கலாம் |
| 5. | செடிகள் | – | கழுவலாம் |

7CFAVD



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 112 31-03-2019 14:54:20

## இவர்களைத் தெரியுமா?

### விண்வெளியை அடைந்தவர்கள்



ராகேஷ் ஷர்மா



கல்பனா சாவ்லா

### பளு தூக்கும் வீரர்கள்



மல்லேஸ்வரி




ஜெரிமி

### சிகரம் தொட்டவர்கள்



ஹிலாரி, நார்கே



பச்சேந்திரி பால்

### சமையல் கலைஞர்கள்



மஸ்தானம்மா




தாமோதரன்

ஆணின் வேலைகள், பெண்ணின் வேலைகள் என்று தனித்தனியே உள்ளனவா?

## படத்திற்குரிய செயலை எழுதுக




பாடுகிறான்















3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 113 31-03-2019 14:54:21

# 19. நாங்கள் நண்பர்கள்

KXVNNW

## ஆதி

நடனம் ஆடப் பிடிக்கும்.

நாய்க்குட்டி வளர்க்கிறான். அதனுடன் விளையாடி மகிழ்வான்.

திரைப்படம் பார்ப்பதில் ஆர்வம் அதிகம்.



தான் போகும் திசையில் நிலாவும் வருவதாகக் கூறுவான். அதைப் பார்த்தபடி அங்குமிங்கும் ஓடுவான்.

பழங்களை விரும்பிச் சாப்பிடுவான்.

எளிதில் கோபப்படுவான்.

## தமிழினி



எந்தப் புதிருக்கும் எளிதில் விடை சொல்வாள்.

மீன்கள் வளர்க்கிறாள். அவை நீந்துவதைப் பார்த்து மகிழ்வாள்.

புதிர்க் கதைகளை விரும்பிப் படிப்பாள்.

இரவில் நட்சத்திரங்களை எண்ணுவது பிடிக்கும்.

முட்டையும் மீனும் விருப்பமான உணவு.

தயக்கமின்றித் தெளிவாகப் பேசுவாள். பயப்பட மாட்டாள்.




3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 114 31-03-2019 14:54:21




இவர்கள் மூவரும் நண்பர்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள்.

உங்கள் நண்பர்களைப் பற்றி நீங்களும் கூறலாமே!

புதியவர் யாரேனும் பிடித்த பொருளைக் கொடுத்து தன்னுடன் வருமாறு அழைத்தால்...




இந்தச் சூழலில் நீ என்ன செய்வாய்?



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 115 31-03-2019 14:54:23

# பயிற்சி

## படித்துப்பழகுக

புதிர்க்கதைகள்

படக்கதைகள் நண்பர்கள் உருவங்கள்

வண்ணப்பூக்கள் மேகங்கள்

## எழுதிப் பழகுக

புதிர்க்கதைகள்

ஆர்வம் நட்சத்திரங்கள் இனிப்புப் பண்டம்

பூச்செடிகள் திரைப்படம்

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. ஜெரினுக்கு வம்புப் பேச்சுகள் பிடிக்கும். ▢
2. ஆதிக்குத் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். ▢
3. தமிழினி தயக்கமின்றிப் பேசுவாள். ▢
4. ஜெரின், ஆதி, தமிழினி மூவரும் உடன்பிறந்தவர்கள். ▢

## வாய்மொழியாக விடை கூறுக

1. ஆதிரை, ஜெரின், தமிழினியிடம் உனக்குப் பிடித்தவை என்னென்ன?

## விடை எழுதுக

1. நண்பர்கள் மூவரில் உனக்குப் பிடித்தவர் யார்? ஏன்?

W5MZA5



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 116 31-03-2019 14:54:24


தமிழினி இந்தப் புதிருக்கு விடை கண்டுபிடித்துவிட்டாள். நீங்களும் கண்டுபிடித்துப் பொருத்துங்கள்

| | |
|---|---|
| தட... தட... |  |
| டிரிங்... டிரிங்... |  |
| பாம்... பாம்... |  |
| பட்... பட்... |  |

எந்த எழுத்தை ஆதியிடம் கூறினாலும் உடனடியாக அந்த எழுத்தில் தொடங்கும் பல சொற்களைச் சொல்லிவிடுவான். நீங்களும் விளையாடி மகிழுங்கள்




இந்தப் பூனைகள் ஜெரின் வரைந்தவை. உங்களுக்குப் பிடித்ததை நீங்களும் வரையுங்கள்



# 20. பயணம்...

குட்டிப் பையன் சிட்டி குளிக்கப் போனான். குழாயைத் திறந்தான். தண்ணீர் குபு...குபுவென வந்தது.



'குளிக்கப் போறேன் – நான்
குளிக்கப் போறேன்
அழுக்குப்போக நல்லா
குளிக்கப் போறேன்'

EK2EAM


எனப் பாட்டுப் பாடியபடி வழலைக் கட்டியைக் குழைத்தான்.

'குமிழி வந்தேன்
வண்ணக்குமிழி வந்தேன்
சிட்டியின் கைகளில்
குமிழி வந்தேன்'



சிட்டியின் கையிலிருந்து பாட்டுச் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத் தன் கையைப் பார்த்தான். கை, கால்கள் முளைத்த வண்ணக்குமிழி ஒன்று அவன் கையில் இருந்தது. சிட்டியைப் பார்த்துக் குதூகலமாகச் சிரித்தது. அதனைத் தொட்டுப் பார்க்க ஆர்வத்துடன் விரலை நீட்டினான். "ஆ! நீ தொட்டால் நான் உடைந்து விடுவேனே", என்றது குமிழி. சிட்டி சிரித்தபடி தலையை ஆட்டினான்.

மெல்ல, தன் முகத்தைத் தேய்த்தான். குமிழி, சிட்டியின் நெற்றியில் நடந்தபடி,



'நடந்து வந்தேன் – நான்
நடந்து வந்தேன்
சிட்டியின் நெற்றியில்
நடந்து வந்தேன்
' என்று பாடியது.



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 118 31-03-2019 14:54:26

பாடலைக் கேட்டுப் புன்னகைத்தான் சிட்டி. மீண்டும் தேய்க்கத் தொடங்கினான்.

'சறுக்கி வந்தேன் – நான்
சறுக்கி வந்தேன்
சிட்டியின் மூக்கின்மேல்
சறுக்கி வந்தேன்'



என்று பாடியபடி சறுக்கியது குமிழி. சிட்டி அதன் குறும்பைக் கண்டு மகிழ்ந்தான். தன் காதுகளைத் தேய்க்கத் தொடங்கினான். குமிழி, காதுகளில் வளைந்தபடி,



'வளைந்து வந்தேன் – நான்
வளைந்து வந்தேன்
சிட்டியின் காதுகளில்
வளைந்து வந்தேன்'
என்று பாடியது.

"ஏய்! காதுகளில் இவ்வளவு சத்தமாய்ப் பாடாதே", செல்லமாய் அதட்டினான் சிட்டி. "ஓ! சரி, நண்பனே!" புன்னகையுடன் தலையாட்டியது குமிழி.

தன் தோள்களைத் தேய்த்தான் சிட்டி. குமிழி, சரசரவென்று வழுக்கியபடி,

'வழுக்கி வந்தேன் – நான்
வழுக்கி வந்தேன்
சிட்டியின் தோள்களில்
வழுக்கி வந்தேன்'
என்று பாடியது.



கலகலவெனச் சிரித்தபடி சிட்டி வயிற்றின்மீது தேய்த்தான். கடகடவென உருண்ட குமிழி,



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 119 31-03-2019 14:54:26




'உருண்டு வந்தேன் – நான்
உருண்டு வந்தேன்
சிட்டியின் வயிற்றின்மேல்
உருண்டு வந்தேன்'
என்று பாடியது.

ஓரக்கண்ணால் பார்த்தபடி தன் கால்களைத் தேய்த்தான் சிட்டி. அவன் குட்டிக் கால்களில் குடுகுடுவென ஓடிவந்த குமிழி,

'ஓடி வந்தேன் – நான்
ஓடி வந்தேன்
சிட்டியின் கால்களில்
ஓடி வந்தேன்'
என்று பாடியது.



தேய்த்து முடித்ததும் தண்ணீரைத் தன்மீது ஊற்றினான் சிட்டி.



அப்போது குமிழி,

'பயணம் வந்தேன் – நான்
பயணம் வந்தேன்
தலைமுதல் கால்வரை
பயணம் வந்தேன் – சிட்டியின்
தலைமுதல் கால்வரை
பயணம் வந்தேன்'

என்று பாடியபடியே
சிட்டிக்குக் கையசைத்தது.

"நாளையும் நீ வரவேண்டும்" என்று அன்புக் கட்டளையிட்டுக் கையசைத்தான், சிட்டி.



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 120 31-03-2019 14:54:29

# பயிற்சி

## படித்துப்பழகுக

வழுக்கி வந்தேன் | வளைந்து வந்தேன்

உருண்டு வந்தேன் | சறுக்கி வந்தேன்

ஓடி வந்தேன் | நடந்து வந்தேன்

## எழுதிப் பழகுக

வண்ணக்குமிழி

வழலைக்கட்டி | குட்டிப்பையன்

பாட்டுச்சத்தம் | பயணம்

## பொருத்துக

வண்ணக்குமிழி,

| | | | |
|---|---|---|---|
| 1. | மூக்கில் | – | வழுக்கி வந்தது |
| 2. | காதில் | – | வளைந்து வந்தது |
| 3. | தோளில் | – | ஓடி வந்தது |
| 4. | காலில் | – | சறுக்கி வந்தது |

WJWY9T

## வாய்மொழியாக விடை கூறுக

1. வண்ணக்குமிழி எவ்வாறெல்லாம் பயணம் சென்றது?

## விடை எழுதுக

1. வண்ணக்குமிழி எங்கெங்கே பயணம் செய்தது?

குமிழி சிட்டியின் முதுகில் இருக்கிறது. என்ன பாடியிருக்கும்? எழுதுக.

.....................................................................

.....................................................................

.....................................................................

.....................................................................



ஒரு எழுத்தை நீக்கினால் உடல் உறுப்பு கிடைக்கும். கண்டுபிடித்து எழுதுக.

| | |
|---|---|
| தவலை ☐ | புகை ☐ |
| கவண் ☐ | நகரம் ☐ |
| பகல் ☐ | காவல் ☐ |

**என் பாதுகாப்பு! என் கையில்!**

சத்தான உணவை உண்பேன்.

நாள்தோறும் குளிப்பேன். சுத்தமாக இருப்பேன்.

சாலையில் கவனமாகச் செல்வேன்.

ஆபத்து தரும் செயல்களைச் செய்யமாட்டேன்.

என்னை எவரும் தவறாகத்தொட விடமாட்டேன்.

அன்றாடம் நடப்பதைப் பெற்றோரிடம் கூறுவேன்.

# 21. கடற்கரைக்குப் போகலாம்

B6DC3C

கடற்கரைக்குப் போகலாம்
மணலில் வீடு கட்டலாம்
கிளிஞ்சல் சங்கு பொறுக்கலாம்
கட்டும் வீட்டில் ஒட்டலாம்

பந்தைத் தட்டி அடிக்கலாம்
நண்டைத் துரத்தி ஓடலாம்
பட்டம் விட்டுப் பார்க்கலாம்
குட்டிக்கரணம் போடலாம்

ஈர மணலில் எழுதலாம்
அழிக்கும் அலையைத் துரத்தலாம்
துள்ளித்துள்ளிக் குதிக்கலாம்
தண்ணீரிலே நனையலாம்



பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 123 31-03-2019 14:54:31

# பயிற்சி

## ஒலித்துப்பழகுக

கட்டலாம்  பொறுக்கலாம்

ஒட்டலாம்  ஓடலாம்  எழுதலாம்

குதிக்கலாம்  நனையலாம்  துரத்தலாம்

## படித்தும் எழுதியும் பழகுக

கடற்கரை  கிளிஞ்சல்

குட்டிக்கரணம்  ஈரமணல்  அலை

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | மணலில் வீடு | – | எழுதலாம் |
| 2. | அலையைத் | – | அடிக்கலாம் |
| 3. | பந்தைத் தட்டி | – | துரத்தலாம் |
| 4. | நண்டைத் துரத்தி | – | கட்டலாம் |
| 5. | ஈர மணலில் | – | ஓடலாம் |

7RP9V2

## கலந்துரையாடுக

கடற்கரைக்குச் சென்றால் என்னென்ன செய்யலாம்.




3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 124 31-03-2019 14:54:32

## இந்த இடங்களுக்குச் சென்றால் என்னவெல்லாம் செய்வீர்கள்?






## வண்ணம் தீட்டுக






3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 125 31-03-2019 14:54:33

# 22.தொடர்வண்டி நிலையத்தில்...






- படத்தைப் பார்த்துப் பேசுக
- சிறுசிறு தொடர்களை உருவாக்குக

## வினா கேட்கலாம்



1. எத்தனை மரங்கள் உள்ளன?
2. முயல் என்ன செய்கிறது?
3. நரி யாரைத் துரத்துகிறது?

நீங்களும் வினாக்களைக் கேளுங்கள்.

8784WD

---

---



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 128 31-03-2019 14:54:34


# பறக்கும் யானை






பறக்கும் யானை செய்க... ஊதிப் பறக்க விடுக...

## யானைக்கு வழிகாட்டி உதவுங்கள்



# 23. அன்றும்... இன்றும்...

தாத்தாவும் காவியாவும் குளக்கரையில் நின்றிருந்தனர். தாத்தா குளத்தையே பார்த்துக்கொண்டு இருந்தார். அவருடைய முகம் வாடி இருந்தது.



PRTPVV

"ஏன் தாத்தா கவலையாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள் காவியா.

"இது எப்படி இருந்த குளம் தெரியுமா, காவியா?" தாத்தா சொல்லத் தொடங்கினார்.

"இதோ இந்தத் தார்ச்சாலை அப்போது இல்லை. மண்சாலைதான். குளம் முழுவதும் நீர் நிரம்பி இருக்கும். 



போன்றவை தண்ணீர் குடிக்க வந்து போகும். 

குளத்தில் குளிக்கும். 

துள்ளிக் குதிக்கும். 

கூட்டம் கூட்டமாய் நீந்துவதைப் பார்க்க அழகாக இருக்கும். 

பிடிக்க 

நிற்கும். குளத்தின் அருகே பெரிய 

இருக்கும். அங்கு 

கீச்சிடும். அதன் பழங்களைக் கொத்தித் தின்ன 

பறந்து வரும். இவற்றை எல்லாம் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா?"



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 130 31-03-2019 14:54:35



"ஓ... அப்படி இருந்த குளமா இது?" என்று வியப்புடன் கேட்டாள் காவியா.

"ஆமாம், ஆனால் இப்போதோ... குளத்தில் எவ்வளவு குப்பைகள் பார். நீரும் வற்றிவிட்டது", வருத்தத்துடன் சொன்னார் தாத்தா.

"நீங்கள் முன்பு பார்த்த அந்தக் குளத்தைப் பார்க்க எனக்கும் ஆசையாக இருக்கிறது. இதைச் சரிசெய்ய முடியாதா தாத்தா?", என்று கேட்டாள் காவியா.



"அதைப்பற்றித்தான் ஊர்த்தலைவரிடம் பேசி இருக்கிறேன். விரைவில் சரிசெய்வதாகச் சொல்லியிருக்கிறார்" என்றார் தாத்தா.

பழைய குளம் காவியாவின் மனதில் கற்பனையாக விரிந்தது. மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தபடி நடக்கத்தொடங்கினாள் காவியா.



# பயிற்சி

## படித்துப்பழகுக

கூட்டம் கூட்டமாய் | வாத்துக்கூட்டம்

குருவிகள் கீச்சிடும் | வற்றிவிட்டது | வாடி இருந்தது

ஊர்த்தலைவர் | கற்பனையாக விரிந்தது

## எழுதிப் பழகுக

குளக்கரை | தண்ணீர் | தார்ச்சாலை | மண்சாலை

குருவிகள் | ஊர்த்தலைவர் | கற்பனை | குப்பைகள்

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. தாத்தாவும் காவியாவும் பேருந்து நிலையத்தில் நின்றிருந்தனர். ☐
2. குளத்தைக் கண்ட தாத்தாவின் முகம் மலர்ந்தது. ☐
3. மண்சாலை இப்போது தார்ச்சாலையாக மாறியுள்ளது. ☐
4. குளத்தில் தற்போது நீர் நிரம்பியுள்ளது. ☐
5. குளத்தைச் சரிசெய்ய உதவுவதாகச் சொன்னவர் ஊர்த்தலைவர். ☐

4DA3PE

## பொருத்துக






கீச்சிடும் | துள்ளிக் குதிக்கும் | மீன் பிடிக்க நிற்கும் | பழம் தின்னப் பறந்து வரும்

## வாய்மொழியாக விடை கூறுக

1. குளம் எப்படி இருந்ததாகக் காவியாவிடம் தாத்தா கூறினார்?

## விடை எழுதுக

1. குளம் தற்போது எவ்வாறு உள்ளது?
2. குளத்தைச் சரிசெய்யும்படி தாத்தா யாரிடம் கூறினார்?


## இவர்கள் பேசினால் என்ன பேசுவார்கள்?













3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 133 31-03-2019 14:54:41

# எதிர்ச்சொல் அறிவோம்



பெரியது

சிறியது





பல

சில





உயரம்

குட்டை





ஏறு

இறங்கு





இழு

தள்ளு



## படித்துப்பார்



மேசையின் மேலே பூனை

மேசையின் கீழே பானை

கூடையின் உள்ளே பூக்கள்

கூடைக்கு வெளியே ஈக்கள்





சூடான தேநீர்

குளிர்ச்சியான இளநீர்

## பொருத்துக



பழைய

புதிய






முன்னால்


பின்னால்





அருகில்

தொலைவில்





3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 135 31-03-2019 14:54:47

# 24. படவிளக்க அகராதி

ம



**மடிக்கணினி**

- கணினியைவிட எடை குறைந்தது.
- விரும்பும் இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம். குறைந்த மின் ஆற்றலில் இயங்கும்.

மா



**மாம்பழம்**

- இது நமது தேசிய கனி.
- மாம்பழத்திலிருந்து பழச்சாறு, பழப்பாகு போன்றவை தயாரிக்கப்படுகின்றன.
- மாம்பழம் பலா, வாழையுடன் இணைந்து முக்கனி என்று அழைக்கப்படுகிறது.

மி



**மின்தூக்கி**

- படிக்கட்டுகளில் ஏறுவதை எளிதாக்கும் கருவி.
- மின்சாரத்தால் இயங்கும்.
- இதன் கதவுகள் திறக்கும்போது விரைவாகவும் மூடும்போது மெதுவாகவும் செயல்படும்.

மீ



**மீன்**

- நீரில் வாழும் உயிரினம்.
- நாம் மூக்கினால் சுவாசிப்பதுபோல, மீன்கள் செவுள்களால் சுவாசிக்கும்.
- பல வண்ணங்களில், பல வடிவங்களில், பல அளவுகளில் மீன்கள் காணப்படுகின்றன.

மு



**முத்து**

- சிப்பி என்ற நீர்வாழ் உயிரினத்திலிருந்து முத்து உருவாகிறது.
- இது விலைமதிப்பு மிக்கது.
- அணிகலன்களை அழகுபடுத்தப் பயன்படும்.

மூ



**மூங்கில்**

- புல் வகையைச் சார்ந்தது.
- மிகவேகமாக வளரக்கூடியது.
- பாண்டா கரடிகள் மூங்கில் இலைகளை விரும்பி உண்ணும்.
- மூங்கிலில் கிடைக்கும் ஒருவகை அரிசியில் உணவு தயாரிக்கலாம்.



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 136 31-03-2019 14:54:49

மெ



### மெழுகு

- தாவரங்கள், விலங்குளிடமிருந்து கிடைக்கிறது.
- செயற்கையாகவும் தயாரிக்கப்படுகிறது.
- மிட்டாய்கள், மருந்துப் பொருள்கள் செய்யவும் பயன்படுகிறது.
- உருகும் தன்மை கொண்டது.

மே



### மேகம்

- நீர்த்துளிகள் பல சேர்ந்து மேகம் ஆகிறது.
- மேகம் குளிர்ந்து மழையாகி மண்ணில் விழுகிறது.
- ஒவ்வொரு மேகமும் பல ஆயிரம் லிட்டர் நீரைக்கொண்டது.

மை



### மைனா

- கூட்டமாக வாழும் பறவை.
- பூச்சிகளையும் பழங்களையும் உண்ணும்.
- மரப்பொந்துகளில் கூடுகட்டும்.

மொ



### மொட்டு

- மலரின் இதழ்கள் விரியும் முன்பு குவிந்து மூடி இருக்கும்.
- இதுவே மொட்டு எனப்படும்.
- மொட்டின் அமைப்பு மலரின் வகையைப் பொருத்து மாறுபடும்.

மோ



### மோர்

- பாலிலிருந்து கிடைக்கும் தயிரைக் கடைவதால் மோரைப் பெறுகிறோம்.
- இது உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் உணவு.
- வயிற்றுப்புண்ணைக் குணப்படுத்தும்.

மௌ



### மௌவல்

- இதன் மற்றொரு பெயர் மரமல்லி.
- இதனைப் பன்னீர்ப்பூ எனவும் கூறுவர்.
- இதன் காம்பு நீண்டு இருக்கும்.
- நறுமணம் மிகுந்தது.

HYQGHX



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 137 31-03-2019 14:54:50

# 25. கொன்றை வேந்தன்

T6HS46

1. **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.**
   *தாயும் தந்தையும் கண்முன்னே காணும் தெய்வங்கள் ஆவர்.*
2. **ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.**
   *குறையாத ஆர்வமே முன்னேற்றம் தரும்.*
3. **எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**
   *கணக்கும், மொழியும் இரு கண்கள் போன்றவை.*
4. **கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.**
   *சேமித்த பொருளைவிட கல்வியே உண்மையான செல்வம்.*
5. **தீராக் கோபம் போராய் முடியும்.**
   *நெடுநாள் கோபம் சிக்கலில் முடியும்.*
6. **நல்லிணக்கம் அல்லது அல்லல்படுத்தும்.**
   *இணக்கம் இல்லாத நட்பு துன்பம் தரும்.*
7. **நுண்ணிய கருமம் எண்ணித் துணி.**
   *சிறிய செயலாக இருந்தாலும் சிந்தித்து முடிவு செய்ய வேண்டும்.*
8. **பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.**
   *தீமை தரும் எல்லாவற்றையும் தவிர்க்க வேண்டும்.*
9. **மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.**
   *அமிழ்தம் போன்ற அரிய உணவையும் பகிர்ந்து உண்ண வேண்டும்.*
10. **முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.**
    *செயல்களுக்கு ஏற்பவே விளைவுகள் இருக்கும்.*

– ஔவையார்



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 138 31-03-2019 14:54:50


TKRR3U

# மொழியோடு விளையாடு


## சொல் விளையாட்டுக்கு...




## குறுக்கெழுத்துப் புதிருக்கு...




## சொல்வளம் பெருக...



# தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்


பள்ளிக்கூடம்


நூலகம்



மருத்துவமனை


மருந்துக்கடை


காவல் நிலையம்


ஒலிவாங்கி


பேருந்து நிலையம்



ஒளிப்படம்


தொடர்வண்டி நிலையம்



இடுப்புப்பட்டி


விமான நிலையம்



கைக்கடிகாரம்


துறைமுகம்


கழிப்பறை


திரையரங்கு


தலைக்கவசம்


உறிஞ்சுகுழல்


வாழ்த்து அட்டை


ஒலிப்பான்


செங்கிழங்கு

## வந்த பாதை

### பொருத்தமான இரட்டைச் சொற்களை நிரப்புக

(மெல்ல மெல்ல, துள்ளித் துள்ளி, சலசல, கலகல, பளபள)



சிறுவர்கள் ---------------- என்று சிரித்தனர்.



நத்தை ---------------- நகர்ந்து செல்கிறது.



புதிய குடம் ---------------- என்று மின்னுகிறது.





மான் ---------------- ஓடுகிறது.



ஆற்று நீர் ---------------- என்று ஓடுகிறது.

### படத்தைப்பார். பொருத்தமான செய்யுள் அடியை எழுதுக.





### ஒத்த ஓசையுடைய சொற்களைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| எண் | – | ஆக்கம் |
| ஊக்கம் | – | கண் |
| மெய்ப்பொருள் | – | விருந்து |
| மருந்து | – | பிற்பகல் |
| முற்பகல் | – | கைப்பொருள் |



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 141

31-03-2019 14:54:56

## மாறியுள்ள எழுத்துகளை சொல்லாக்குக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மை | ற் | ஒ | று | | | |
| டு | ன் | தே | கூ | | | |
| க | ற் | ட | ரை | க | | |
| லை | ண் | ம | சா | | | |
| ண | வ | ண் | க் | மி | கு | ழி |
| சி | ட் | டா | ணு | ங் | தொ | கி |

## படங்களைப் பார். தொடர்புடைய உடல் உறுப்பின் பெயரை எழுதுக.

















# கற்றல் விளைவுகள்

| 1. கேட்டல் | 2. பேசுதல் | 3. படித்தல் | 4. எழுதுதல் | 5. நடைமுறை இலக்கணம் |
|---|---|---|---|---|
| • படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை நுட்பமாக உற்றுநோக்கியும் சொல்லக்கேட்டும் சுவைப்பர்.<br>• கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br>• சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.<br>• எளிய வாய்மொழி அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர்.<br>• பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். | • ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுவர்.<br>• படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுவர்.<br>• செய்திகளைத் திரட்டும் பொருட்டு வினா எழுப்புவர்.<br>• பார்த்தவை, கேட்டவை பற்றிப் பேசுவர்.<br>• கேட்டும் படித்தும் அறிந்த பாடல்கள், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுவர்.<br>• சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலிப்பர்.<br>• கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுவர். தமக்குரிய நடையில் பேசுவர்.<br>• கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துவர். | • தமிழ்மொழியின் அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்கண்டு முறையாக உச்சரிப்பர்.<br>• வடமொழி ஒலிப்புகளுக்குரிய, கிரந்த வரிவடிவங்களை அறிந்து படிப்பர்.<br>• எளிய சொற்கள், சிறுசிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் உரக்கப் படிப்பர்.<br>• எளிய சந்தப் பாடல்களை உரிய ஓசையுடன் படிப்பர். எளிமையான சிறுசிறு படக்கதைகளையும் பாடல்களையும் படிப்பர்.<br>• படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிப்பர்.<br>• படித்த பகுதியில் கேட்கப்படும் சிறுசிறு வினாக்களுக்கு விடையளிப்பர். | • படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்களைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர்.<br>• வடமொழி ஒலிப்புகளுக்குரிய, கிரந்த வரிவடிவங்களை அறிந்து எழுதுவர்.<br>• சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் சொல்லக்கேட்டு எழுதுவர்.<br>• எளிய பாடல்கள், கதைகள், உரைநடைப்பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு முழுமையான தொடர்களில் விடையளிப்பர்.<br>• சிறுசிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுவர்.<br>• கேட்டவற்றை/ படித்தவற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துவர். | • ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குவர்.<br>• ஒருமை, பன்மை விகுதிகளை (கள், க்கள், ங்கள்) அறிந்து பயன்படுத்துவர்.<br>• பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை அறிந்து பயன்படுத்துவர். |

| 6. கற்கக் கற்றல் | 7. சொல்லாட்சித் திறன் | 8. படைப்புத் திறன் | 9 . விழுமியங்கள் | 10. வாழ்வியல் திறன் |
|---|---|---|---|---|
| • படக்கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுவர்.<br>• பெயர்ப்பலகைகள், அறிவிப்புகளைப் படிப்பர்.<br>• விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர். | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.<br>• பெயர்ச்சொற்கள். வினைச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள்<br>• வீடு, பள்ளியில் உள்ள பொருள்களின் பெயர்கள்<br>• குடும்ப உறுப்பினர் பெயர்கள்<br>• தின்பண்டங்களின் பெயர்கள்<br>• எளிய வருணனைச் சொற்கள்<br>• ஆங்கில மாதங்களின் பெயர்கள் | • முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை உருவாக்குவர்.<br>• குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுவர்.<br>• கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குவர்.<br>• முதல் சொல்லின் இறுதி எழுத்தை அடுத்த சொல்லின் முதல் எழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்குவர். | • நேர்ந்தவறாமை.<br>• கூட்டுணர்வு<br>• விதிகளைப் பின்பற்றுவர்.<br>• தூய்மை பேணுவர்.<br>• பொருள்களைப் பாதுகாப்பர்.<br>• பிறருக்கு உதவுவர்.<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவர். | கீழ்க்காணும் வாழ்வியல் திறன்களைப் பெற்று உரிய நேரங்களில் பயன்படுத்துவர்.<br>• தன்னை அறியும் திறன்.<br>• சிக்கல் தீர்க்கும் திறன்.<br>• முடிவெடுக்கும் திறன்.<br>• கூர்சிந்தனைத் திறன்.<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்.<br>• சிறந்த தகவல் தொடர்புத் திறன்.<br>• உறவுகளை இணக்கத்துடன் பேணும் திறன்.<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்.<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்.<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன். |



3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 143 31-03-2019 14:54:57

# தமிழ் – இரண்டாம் வகுப்பு
## பாடநூல் உருவாக்கக் குழு

### மேலாய்வாளர்கள்

முனைவர் **ச. மாடசாமி,** பேராசியர் ( ஓய்வு), சென்னை.

திரு. **ச. தமிழ்ச்செல்வன்** எழுத்தாளர், சிவகாசி.

திருமதி **ஏ.எஸ். பத்மாவதி** எழுத்தாளர், சென்னை.

### வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **வெ. உஷாராணி,** முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம்.

திருமதி **இரா. பொன்மணி ,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர்,
திருவள்ளூர் மாவட்டம்.

### நூலாசிரியர்கள்

முனைவர் **அ. மாசிலாமணி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குருக்கத்தி,நாகப்பட்டினம் மாவட்டம்.

திருமதி **வே. சுடரொளி,** இடைநிலை ஆசிரியர்,
அம்பத்தூர் நகராட்சி தொடக்கப்பள்ளி, கொரட்டூர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

செல்வி **பா. ப்ரீத்தி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, சீர்ப்பனந்தல்,
ரிஷிவந்தியம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

திரு. **வெ. ராஜா** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, இராக்கியாம்பட்டி,
கொங்கணாபுரம் ஒன்றியம், சேலம் மாவட்டம்.

திரு. **பா. ச. குப்பன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயந்தாங்கல்,
காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **பா. கற்பகம்,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, ஐயப்பநகர்,
வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி **வீ. சௌரீஸ்வரி,** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குமரன்கட்டம்,
ஆனைமலை ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **அ. கலைவாணி,** பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காளம்பாளையம்,
தொண்டாமுத்தூர் ஒன்றியம், கோயம்புத்தூர் மாவட்டம்.

திருமதி **ச. பஞ்சவர்ணம்,** தலைமை ஆசிரியர், ஊராட்சி
ஒன்றிய தொடக்கப்பள்ளி, தாம்பரம், சானிடோரியம், சென்னை.

திரு. **கு.வ. மகேந்திரன்** இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரிய குக்குண்டி,
ஆற்காடு ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

திருமதி **த. ஜெயமாரி,** இடைநிலை ஆசிரியர்,
ஸ்ரீஜெயேந்திர சுவாமிகள் மேனிலைப்பள்ளி,
மகாராஜா நகர், திருநெல்வேலி மாவட்டம்.

### ஓவியர்கள்

திரு. **சோ. வேல்முருகன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு. **கே.மதியழகன்,** இடைநிலை ஆசிரியர்,
ஊ.ஒ. நடு நிலைப்பள்ளி, ஊத்துக்காடு, வலங்கைமான் ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம்.

திரு. **கோபு சுப்பையன்,**
ஐ திங் கிரியேஷன்ஸ், வடபழனி, சென்னை.

திரு. **தே.துரை,** ஓவிய ஆசிரியர்,
பிஷப் ஹீபர் மேல்நிலைப்பள்ளி, தெப்பக்குளம், திருச்சி.

திரு. **சு. மனோகரன்,** ஓவிய ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, சிலமலை, தேனி.

திரு. **த.தா.மு. பிரபுராஜ்,** ஓவிய ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, மணிமங்கலம், குன்றத்தூர் ஒன்றியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

திரு. **கா. தனஸ் தீபக் ராஜன்**

திரு. **கா. நலன் நான்சி ராஜன்**

திரு. **நா. காசி ராஜன்**

திரு. **வேல்முருகன் இராதாகிருஷ்ணன்**

திரு. **பா. பிரமோத்**

திரு. **சு. முரளி**

### விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு

திரு. இரா. ஜெகநாதன், இடைநிலைஆசிரியர்,
ஊராட்சிஒன்றியநடுநிலைப்பள்ளி, கணேசபுரம், போளூர்
,திருவண்ணாமலை.

திரு. சூ.ஆல்பர்ட் வளவன் பாபு ,பட்டதாரிஆசிரியர்
அரசினர்உயர்நிலைப்பள்ளி, பெருமாள் கோவில்,
பரமக்குடி, இராமநாதபுரம்

திரு. மு.சரவணன் , பட்டதாரிஆசிரியர்,
அரசினர் மகளிர் மேனிலைப்பள்ளி, வாழப்பாடி, சேலம்

### பக்க வடிவமைப்பாளர்

ஓவியர் திரு. **கு. கலைச்செல்வன்,** சென்னை.
திரு. சி. அடைக்கல ஸ்டீபன்.
திரு. ஸ்ரீதர்

### தரக்கட்டுப்பாடு
திரு. ராஜேஷ் தங்கப்பன்
திரு. கி.ஜெரால்டு வில்சன்

### ஒருங்கிணைப்பாளர்

திரு. ரமேஷ் முனிசாமி,